- **2005 අංක 28 දරන ගෙවීමේ හා බේරුම් කිරීමේ පද්ධති පනතේ 11 වගන්තිය සමඟ කිය විය යුතු 17 වගන්තිය යටතේ නියෝග** (2025 දෙසැම්බර් 23 දිනැති අංක 2468/06 දරන අති විශේෂ ගැසට් පත්‍රයේ පළ කරන ලද)
- **(188 අධිකාරය වූ) පුරාවස්තු ආඥාපනතේ 46 වගන්තිය සමඟ කියවිය යුතු 47 වගන්තිය යටතේ නියෝග** (බුද්ධ ශාසන, ආගමික සහ සංස්කෘතික කටයුතු අමාත්‍යවරයා විසින් 2026 අප්‍රේල් 11 දින සාදන ලද)
- **මුදල් විශුද්ධිකරණය වැළැක්වීමේ (සංශෝධන) පනත් කෙටුම්පත**
- **මුදල් ගනුදෙනු වාර්තා කිරීමේ (සංශෝධන) පනත් කෙටුම්පත**
- **ත්‍රස්තවාදීන්ට මුදල් සැපයීම මැඩපැවැත්වීමේ සම්මුති (සංශෝධන) පනත් කෙටුම්පත**

සම්බන්ධයෙන්

**රජයේ මුදල් පිළිබඳ කාරක සභාවේ වාර්තාව**

පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරන ලද්දේ

**කාරක සභාවේ සභාපති**

**ගරු (ආචාර්ය) හර්ෂ ද සිල්වා මහතා විසිනි**

2026 ජූලි මස 07 වැනි අඟහරුවාදා

- **2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் 11 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 17 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்** (2025 திசெம்பர் 23 ஆம் திகதிய 2468/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது)
- **(188 ஆம் அத்தியாயமான) தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்** (புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2026 ஏப்ரல் 11 ஆம் திகதி ஆக்கப்பட்டது)
- **பணம் தூய்தாக்கல் தடை (திருத்தச்) சட்டமூலம்**
- **நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம்**
- **பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டமூலம்**

தொடர்பிலான

அரசாங்க நிதி பற்றிய குழுவின் அறிக்கை

**குழுவின் தவிசாளர்**

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அவர்களினால்**

2026 ஜூலை மாதம் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது

# Report of the
# Committee on Public Finance
on

- **Regulations under Section 17 read with Section 11 of the Payment and Settlement Systems Act, No. 28 of 2005** (Published in the Gazette Extraordinary No. 2468/06 of 23rd December 2025)

- **Regulations under Section 47 read with Section 46 of the Antiquities Ordinance (Chapter 188)** (Made by the Minister of Buddhasasana, Religious and Cultural Affairs on 11th April 2026)

- **Prevention of Money Laundering (Amendment) Bill**

- **Financial Transactions Reporting (Amendment) Bill**

- **Convention on the Suppression of Terrorist Financing (Amendment) Bill**

Presented to Parliament

by

**Hon. (Dr.) Harsha de Silva**

**Chair of the Committee**

Tuesday, the 07th July 2026

## කාරක සභා වාර්තාව

රජයේ මුදල් පිළිබඳ කාරක සභාව 2026 ජූනි මස 30 වැනි දින පැවැත් වූ එහි රැස්වීමේ දී පහත සඳහන් නියෝග සහ පනත් කෙටුම්පත් සලකා බලන ලදී:

- **2005 අංක 28 දරන ගෙවීමේ හා බේරුම් කිරීමේ පද්ධති පනතේ 11 වගන්තිය සමඟ කිය විය යුතු 17 වගන්තිය යටතේ නියෝග** (2025 දෙසැම්බර් 23 දිනැති අංක 2468/06 දරන අති විශේෂ ගැසට් පත්‍රයේ පළ කරන ලද)
  *(2026 ජූනි 23 වැනි දින පාර්ලිමේන්තුවට ඉදිරිපත් කරන ලදුව කාරක සභාවට යොමු කරන ලද)*

- **(188 අධිකාරය වූ) පුරාවස්තු ආඥාපනතේ 46 වගන්තිය සමඟ කියවිය යුතු 47 වගන්තිය යටතේ නියෝග** (බුද්ධ ශාසන, ආගමික සහ සංස්කෘතික කටයුතු අමාත්‍යවරයා විසින් 2026 අප්‍රේල් 11 දින සාදන ලද)
  *(2026 ජූනි 12 වැනි දින පාර්ලිමේන්තුවට ඉදිරිපත් කරන ලදුව කාරක සභාවට යොමු කරන ලද)*

- **මුදල් විශුද්ධිකරණය වැළැක්වීමේ (සංශෝධන) පනත් කෙටුම්පත**

- **මුදල් ගනුදෙනු වාර්තා කිරීමේ (සංශෝධන) පනත් කෙටුම්පත**

- **ත්‍රස්තවාදීන්ට මුදල් සැපයීම මැඩපැවැත්වීමේ සම්මුති (සංශෝධන) පනත් කෙටුම්පත**
  *(2026 අප්‍රේල් 09 වැනි දින පාර්ලිමේන්තුවට ඉදිරිපත් කරන ලදුව කාරක සභාවට යොමු කරන ලද)*

**කාරක සභාව විසින් සලකා බැලූ දිනය: 2026 ජූනි මස 30** **වේලාව : ප.ව. 02.00**

**<u>පැමිණි රජයේ මුදල් පිළිබඳ කාරක සභා සභිකයන්</u>**

1. ගරු (ආචාර්ය) හර්ෂ ද සිල්වා මහතා, පා.ම.,
2. ගරු (ආචාර්ය) කෞෂල්‍යා ආරියරත්න මෙනෙවිය, පා.ම.,
3. ගරු රවී කරුණානායක මහතා, පා.ම.,
4. ගරු හර්ෂණ රාජකරුණා මහතා, පා.ම.,
5. ගරු නිමල් පලිහේන මහතා, පා.ම.,
6. ගරු නීතිඥ චිත්‍රාල් ප්‍රනාන්දු මහතා, පා.ම.,
7. ගරු විජේසිරි බස්නායක මහතා, පා.ම.,

- **2005 අංක 28 දරන ගෙවීමේ හා බේරුම් කිරීමේ පද්ධති පනතේ 11 වගන්තිය සමඟ කිය විය යුතු 17 වගන්තිය යටතේ නියෝග** (2025 දෙසැම්බර් 23 දිනැති අංක 2468/06 දරන අති විශේෂ ගැසට් පත්‍රයේ පළ කරන ලද)

***<u>හැඳින්වීම</u>***

මුදල් විශුද්ධිකරණය වැළැක්වීම/ත්‍රස්තවාදයට මුදල් සැපයීම මැඩ පැවැත්වීම (AML/CFT) සඳහා වූ ගෝලීය ප්‍රතිපත්ති සම්පාදකයා ලෙස කටයුතු කරන මූල්‍ය කාර්ය සාධක බලකාය (FATF) සාමාජික රටවල් විසින් පිළිපැදිය යුතු නිර්දේශ 40 ක් හඳුන්වා දී ඇත. එම සංවිධානය විසින් සිය සාමාජික රටවල් එම නිර්දේශය පිළිපැදීම සම්බන්ධයෙන් දක්වන්නා වූ අනුකූලතා මට්ටම ඇගයීම සඳහා කාලීන වශයෙන් අන්‍යොන්‍ය (Mutual Evaluation) ඇගයීම් සිදු කරයි.

ඒ අනුව, මූල්‍ය කාර්ය සාධක බලකාය විසින් මීට පෙර 2006 සහ 2016 වසර වල දී ශ්‍රී ලංකාව සම්බන්ධයෙන් අන්‍යොන්‍ය ඇගයීම් දෙකක් සිදු කර තිබේ. එම දෙවන ඇගයීමේදී මූල්‍ය කාර්ය සාධක බලකාය විසින් ඔවුන්ගේ 14 වන නිර්දේශ සඳහන් වන පරිදි රටක මුදල් හෝ වටිනාකම් පැවරීම් සේවා සපයන්නන් සඳහා වූ ලියාපදිංචි කිරීමේ හෝ බලපත්‍ර ලබාදීමේ නිසි ක්‍රම වේදයක් තිබීමේ අවශ්‍යතාවය දක්වා ඇති අතර, ශ්‍රී ලංකාවේ එවැනි ක්‍රම වේදයක් නොමැති බව අවධාරණය කරමින් එය බරපතල ගැටළුවක් ලෙස සලකා, ශ්‍රී ලංකාව ඔවුන්ගේ 14 වන නිර්දේශය සඳහා ඉහළ අවදානම් මට්ටමක් සහිත රටක් ලෙසට ශ්‍රේණිගත කරනු ලැබීය.

2005 අංක 28 දරණ ගෙවීමේ හා බේරුම් කිරීමේ පද්ධති පනතේ 11 වන වගන්තිය සමඟ කියවිය යුතු 17 වන වගන්තිය ප්‍රකාරව, එම පනතෙහි වූ ප්‍රතිපත්ති සහ ප්‍රතිපාදන ක්‍රියාත්මක කිරීමේ අරමුණ සඳහාත් එම. ප්‍රතිපාදන කාර්යක්ෂමව ක්‍රියාත්මක කිරීම, පරිපාලනය කිරීම සහ බලාත්මක කිරීම සඳහාත් නියෝග නිකුත් කිරීමේ බලය මුදල් විෂයභාර අමාත්‍යවරයා සතු වේ.

ඒ අනුව ශ්‍රී ලංකාවේ ක්‍රියාත්මක වන මුදල් හෝ වටිනාකම් පැවරීම් සේවා සපයන්නන් විසින් මුදල් විශුද්ධිකරණය වැළැක්වීම ත්‍රස්තවාදයට මුදල් සැපයීම මැඩපැවැත්වීම සඳහා නිසි අනුකූලතාව නොමැති වීමේ වත්මන් ගැටලු වලට මුහුණ දීමේ සහ මූල්‍ය කාර්ය සාධක බලකායේ නිර්දේශ අනුගමනය කිරීම සඳහා වූ අවශ්‍යතාවය සැලකිල්ලට ගනිමින්, මුදල්,

ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යවරයා විසින් 2024 අංක 1 දරන මුදල් හෝ වටිනාකම් පැවරීම් සේවා සපයන්නන් සඳහා වන නියෝග 2024 අප්‍රේල් මස 20 දිනැතිව අංක 2382/11 දරණ අතිවිශේෂ ගැසට් පත්‍රයේ පළ කළ අතර, එම නියෝග 2024 ජුනි 03 සිට බලාත්මක විය.

ඉහත සඳහන් මුදල් හෝ වටිනාකම් පැවරීම් සේවා සපයන්නන් සඳහා වන නියෝග යටතේ, ඒ වන විටත් ශ්‍රී ලංකා මහ බැංකුව හෝ වෙනත් නියාමකයෙකු හෝ රාජ්‍ය ආයතනයක් විසින් නිකුත් කරන ලද වෙනත් බලපත්‍රයක්, අවසර පත්‍රයක් හෝ බලය පැවරීමක් නොමැතිව මුදල් හෝ වටිනා කම් පැවරීම් සේවා සපයමින් සිටි සපයන්නන් හට ශ්‍රී ලංකා මහ බැංකුව වෙතින් ලියාපදිංචි සහතිකයක් සඳහා අයදුම් කිරීමට ඉහත නියෝග බලාත්මක වූ දින සිට වසරක කාලයක් ලබා දෙන ලදී. කෙසේ වෙතත්, මේ දක්වා ශ්‍රී ලංකා මහ බැංකුව වෙත ලැබී ඇති අයදුම්පත් ගණන එකක් පමණක් වන අතර, එම අයදුම්පතේ ද හඳුනාගත් බලවත් අඩුලුහුඩුකම් මත ඒවා නිවැරදි කර නැවත ඉදිරිපත් කරන ලෙසට දැනුම් දී ඇත.

දැනට බලාත්මක මුදල් හෝ වටිනාකම් පැවරීම් සේවා සපයන්නන් සඳහා වන නියෝග වලට අනුව, ශ්‍රී ලංකාවේ 2007 අංක 7 දරන සමාගම් පනතෙහි අර්ථ නිරූපනය අනුව, ඇපයෙන් සීමිත සමාගමක්, අක් වෙරළ සමාගමක් හෝ විදේශීය සමාගමක් හැර 2007 අංක 7 දරණ සමාගම් පනත යටතේ ලියාපදිංචි කරන ලද සමාගමක් පමණක්, මුදල් හෝ වටිනාකම් පැවරීම් සේවා සපයන්නන් සඳහා වන නියෝග අනුව ලියාපදිංචි සහතිකයක් ලබා ගැනීම සඳහා සුදුසුකම් ලබයි.

කෙසේ වෙතත්, විදේශීය මුදල් හෝ වටිනාකම් පැවරීම් සේවා සපයන්නන් කිහිපදෙනෙක්ම දැනටමත් ශ්‍රී ලංකාවේ සිටින තම නියෝජිතයින් හරහා මුදල් හෝ වටිනාකම් පැවරීම් සේවා ව්‍යාපාරයෙහි නිරතවන බවට නිරීක්ෂණය වී ඇති අතර, දැනට එවැනි විදේශීය මුදල් හෝ වටිනාකම් පැවරීම් සේවා සපයන්නන් හට, මුදල් හෝ වටිනාකම් පැවරීම් සේවා සපයන්නන් සඳහා වන නියෝගයන් අනුව ශ්‍රී ලංකා මහ බැංකුවේ ලියාපදිංචි වීම සඳහා සුදුසුකම් නොමැත.

ඒ අනුව, විදේශීය මුදල් හෝ වටිනාකම් පැවරීම් සේවා සපයන්නන් සඳහා ද ලියාපදිංචි වීමට ඉඩ පහසුකම් සලසමින් පෙර හඳුනාගත් සීමාවන් ඉවත් කිරීමටත්, එවැනි විදේශීය මුදල් හෝ වටිනාකම් පැවරීම් සේවා සපයන්නන් සඳහා ද ශ්‍රී ලංකා මහ බැංකුවේ නියාමන වපසරිය පුළුල් කිරීම උදෙසා ශ්‍රී ලංකා මහ බැංකුව විසින් දැනට බලාත්මකව පවතින මුදල් හෝ වටිනාකම් පැවරීම් සේවා සපයන්නන් සඳහා වන නියෝග සංශෝධනය කිරීමට තීරණය කර ඇති අතර එය මහ බැංකුවේ පාලක මණ්ඩලය විසින් පහත සඳහන් සංශෝධන සිදු කිරීම සඳහා අනුමැතිය ලබා දී ඇත.

1. ශ්‍රී ලංකාව තුළ මෙහෙයුම් වල නිරත විදේශීය මුදල් හෝ වටිනාකම් පැවරීම් සේවා සපයන්නන් ලියාපදිංචිය සඳහා ඉඩ සලසමින් නව කොටසක් ඇතුළත් කිරීම.
2. දේශීය මුදල් හෝ වටිනාකම් පැවරීම් සේවා සපයන්නන් සඳහා ප්‍රාග්ධන අවශ්‍යතාවය දැනට පවතින රු. මිලියන 20 සිට රුපියල් මිලියන 15 දක්වා අඩු කිරීම සහ විදේශීය මුදල් හෝ වටිනාකම් පැවරීම් සේවා සපයන්නන් සඳහා ඇ.එ.ජ. ඩොලර් 200,000 ක් හෝ වෙනත් විදේශ මුදල් වර්ගයකින් ඊට සමාන මුදලක් සඳහා නව ප්‍රාග්ධන අවශ්‍යතාවයක් හඳුන්වා දීම.
3. විදේශීය අයදුම්කරුවන් ඇතුළුව දැනටමත් මුදල් හෝ වටිනාකම් පැවරීම් සේවා සපයන්නන් ලෙස ක්‍රියා කරන්නන් හට ශ්‍රී ලංකා මහ බැංකුව සමඟ ලියාපදිංචි වීම සඳහා දී ඇති කාලය 31.03.2026 දක්වා දීර්ඝ කිරීම.
4. වසර තුනකට වරක් ලියාපදිංචිය අලුත් කිරීමේ අවශ්‍යතාවය ඉවත් කිරීම.

ඒ අනුව 2005 අංක 28 දරන ගෙවීමේ හා බේරුම් කිරීමේ පද්ධති පනතේ විධිවිධාන අනුව, 2025 අංක 1 දරන මුදල් හෝ වටිනාකම් පැවරීම් සේවා සපයන්නන් සඳහා වන නියෝගය පාර්ලිමේන්තුවේ අනුමැතිය සඳහා ඉදිරිපත් කර ඇත.

***<u>කාරක සභාවේ නිරීක්ෂණ</u>***

කාරක සභාව විසින් පහත කරුණු පිළිබඳව නිරීක්ෂණය කළා ය.

- මුදල් හෝ වටිනාකම් පැවරීම් සේවාවන් (MVTS) සම්බන්ධ නියාමන බලාත්මක කිරීමේ දුර්වලතා හේතුවෙන් ඓතිහාසිකව හවාලා (Hawala) සහ උණ්ඩියල් (Undiyal) වැනි අවිධිමත් ක්‍රමවේදයන් නියාමනය අවිනිශ්චිත කලාපයක ක්‍රියාත්මක වීමට ඉඩ ලැබී තිබුණද, මෑතකාලීන නීතිමය විධිවිධාන මගින් තම කටයුතු විධිමත් කිරීමට අපොහොසත් වන බලපත්‍ර රහිත ක්‍රියාකරුවන්ට එරෙහිව නඩු පැවරීම සඳහා පදනමක් සලසා දී ඇත.

- MoneyGram සහ Western Union ඇතුළු විධිමත් MVTS ක්‍රියාකරුවන් බලපත්‍රලාභී දේශීය නියෝජිතයන් හරහා ක්‍රියාත්මක වන අතර, අවිධිමත් දේශසීමා අතර අරමුදල් ප්‍රවාහයන් 2020 දී පැවති රුපියල් බිලියන 7 ක පමණ ප්‍රමාණයේ සිට 2022 දී රුපියල් බිලියන 3.7 දක්වා අඩු වී ඇති අතර, එය නියාමන දැඩි කිරීමේ අර්ධ සාර්ථකත්වයක් පෙන්නුම් කරයි.

- විදේශ විනිමය පාලනය, ආනයන ගෙවීම් සත්‍යාපනය සහ රේගු ප්‍රතිසන්ධාන පද්ධතිවල, විශේෂයෙන් ඇතැම් අවස්ථාවලදී භාණ්ඩ ආනයනය කිරීමකින් තොරව සිදු කරන ලද පූර්ව ආනයන ගෙවීම් සම්බන්ධව සැලකිය යුතු දුර්වලතා පැවතුනි.

- **(188 අධිකාරය වූ) පුරාවස්තු ආඥාපනතේ 46 වගන්තිය සමඟ කියවිය යුතු 47 වගන්තිය යටතේ නියෝග (බුද්ධ ශාසන, ආගමික සහ සංස්කෘතික කටයුතු අමාත්‍යවරයා විසින් 2026 අප්‍රේල් 11 දින සාදන ලද)**

***හැඳින්වීම***

නීති විරෝධී ලෙස ප්‍රයෝජනයට ගත් පුරාවස්තු ආපසු ලබා ගැනීමට හෝ ස්ථාන හා පුරාවස්තු ආරක්ෂා කිරීමට හෝ දායක වන තොරතුරු සපයන්නන්ට සහ ක්‍රියාත්මක කිරීමේ නිලධරයන්ට තෑගි දීම සඳහා මෙම අරමුදල පිහිටුවා ඇත. පුරාවස්තු ආඥා පනත මඟින් හඳුන්වා දී ඇති තෑගි අර මුදල 1998 වර්ෂයේ පනත මඟින් සංශෝධනයට ලක් කරන අවස්ථාව දක්වාත් ඉන් පසුවත් මෙම තෑගි ලබා දීමේ ක්‍රම වේදයක් හඳුන්වා දී නොමැත. 46(1) වගන්තියේ සඳහන් පරිදි එනම් එකී වගන්තියේ (අ) යටතේ පුරාවස්තු ආඥා පනත උල්ලංඝනය කිරීම් වල දී අධිකරණයේ පවරනු ලබන නඩු වල චූදිතයන්ට දඩ නියම කළ පසු එකී දඩ මුදලෙන් අඩක් පුරාවිද්‍යා තෑගි අරමුදලට බැර කරනු ලබන අතර එකී අරමුදල් කුමන පාර්ශවයන් වෙත බෙදා දෙන්නේද යන්න පිළිබඳව රෙගුලාසි පැනවීමක් සිදු කර නොතිබුණි.

මේ සම්බන්ධයෙන් රෙගුලාසි ඇතුළත් කෙටුම්පතක් සකස් කර නීති කෙටුම්පත් සම්පාදක වෙත ඉදිරිපත් කර අනුමැතිය ලබාගත් පසු විෂය භාර අමාත්‍යවරයාගේ අත්සන යොදා අමාත්‍ය මණ්ඩලය වෙත ඉදිරිපත් කර අනුමැතිය ලබාගත් පසු පුරාවස්තු ආඥා පනතේ 47 (3) උප වගන්තිය අනුව පාර්ලිමේන්තුවේ අනුමැතිය සඳහා ඉදිරිපත් කිරීමෙන් පසු ගැසට් පත්‍රයේ පළ කිරීම සඳහා යොමු කිරීම සිදු කළ යුතුය. ඒ සඳහා භාෂාත්‍රයෙන් සැකසූ පිටපත් බුද්ධ ශාසන ආගමික හා සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය මඟින් පාර්ලිමේන්තුව වෙත යොමු කර ඇත.

පාර්ලිමේන්තු අනුමැතිය සඳහා ඉදිරිපත් කිරීමට නියමිත රෙගුලාසි මඟින් නම් කරන ලද පාර්ශවයන්ට තෑගි අරමුදලින් කිසියම් ප්‍රතිශතයක් ගෙවීමට සැලසුම් කර ඇත. ඒ අනුව පහත පරිදි පාර්ශවයන් වෙත තෑගි අරමුදල් ගෙවීම සුදුසු බවට නම් කර ඇත.

01. තොරතුරු සපයන්නන් - ගෙවනු ලබන තෑගි අරමුදල් ප්‍රතිශතය 10%
02. නීති කෘත්‍යාන්හි නිරතවන වැටලීමේ නිලධාරීන්ට, පොලිස් නිලධාරීන් හෝ වෙනත් යම් රාජ්‍ය ආයතනයක හෝ පළාත් පාලන ආයතනයක යම් නිලධාරීන් සඳහා - ගෙවනු ලබන තෑගි අරමුදල් ප්‍රතිශතය 30%
03. ස්ථාන පිරික්සීම් සිදු කරන පුරාවිද්‍යා දෙපාර්තමේන්තුවේ නිලධාරීන්ට, නීති කෘත්‍යාන්හි නිරතව සිටින නීති නිලධාරීන් සහ සහකාර නීති නිලධාරි සහ එම දෙපාර්තමේන්තුවේ අනෙතු සේවා නියුක්තිකයන්ට - ගෙවනු ලබන තෑගි අරමුදල් ප්‍රතිශතය 40%

ඉහත සඳහන් පාර්ශවයන් වෙත ගෙවනු ලබන තෑගි අරමුදල් ප්‍රතිශත වල එකතුව 80%ක් වන අතර ඉතිරි සියයට විස්සක (20%) ප්‍රතිශතය පුරාවස්තු තෑගි අරමුදලට බැර කර යුතුය.

**<u>තෑගි අරමුදල් පිරිනැමීමට හේතු වූ කරුණු</u>**

පුරාවස්තු ආඥා පනත උල්ලංඝනය කරන්නන් පිළිබඳව තොරතුරු සපයන්නන්ට ක්‍රියාත්මක කිරීමේ නිලධරයන්ට ඔවුන් විසින් සිදු කරනු ලබන කාර්යයන් තවදුරටත් ඉටු කරලීමේ අරමුණින් සහ ඔවුන් දිරිමත් කිරීම සඳහා මෙම තෑගි අරමුදල හඳුන්වා දී ඇත. පුරාවස්තු ආඥා පනතඋල්ලංඝනය කරන්නන් අත්අඩංගුවට ගැනීම සඳහා පනත මඟින් වැටලීමට කණ්ඩායමක් හඳුනා දී නොමැති වීම හේතුවෙන් පනත උල්ලංඝනය කරන්නන් අත්අඩංගුවට ගෙන නීතිය ක්‍රියාත්මක කිරීමේ කාර්යය භාර්යය පොලීසිය විසින් සිදු කරනු ලබයි.

පුරාවස්තු ආඥා පනත උල්ලංඝනය කිරීම් සම්බන්ධයෙන් පොලීසිය විසින් පවරනු ලබන නඩු වල දී අධිකරණය මඟින් විත්තිකරුවන් වෙත දඩ නියම කළ පසු එකී දඩ මුදලින් අඩක් පුරා වස්තු ආඥා පනතේ 46(1) පුරාවිද්‍යා තෑගි අරමුදලට බැර කළ යුතුය. මෙම නඩු පැවරීම බොහෝ අවස්ථාවල දී පොලීසිය විසින් සිදු කරන නිසා විත්තිකරුවන් වෙත දඩ නියම කිරීමේ දී එකී දඩ මුදලින් අඩක් පොලිස් තෑගි අරමුදලට බැර කිරීමට අධිකරණ නියෝග ලබා ගැනීම පිළිබඳව කරුණු සමහර අවස්ථාවල දී අපට වාර්තා වී ඇත. නමුත් පුරාවස්තු ආඥා පනතේ 46(1) වගන්තිය අනුව එකී දඩ මුදල් බැර විය යුත්තේ පුරාවිද්‍යා තෑගි අරමුදලටයි. මෙවැනි ආකාරයට පොලිස් තෑගි අරමුදලට බැර කිරීම සම්බන්ධයෙන් ඉල්ලීම් කිරීමට හේතු වී ඇත්තේ පුරාවිද්‍යා තෑගි අරමුදල මේ වන විටත් ක්‍රියාවේ නොයෙදෙන බැවින් නිසා විය හැක. මෙසේ පොලිස් තෑගි අරමුදලට බැර කළ හොත් පුරාවිද්‍යා දෙපාර්තමේන්තුවේ නිලධාරීන්ට කිසිඳු තෑගි අරමුදල් ප්‍රතිශතයක් ලබා ගැනීමට නොහැකි වනු ඇත. මෙම පුරාවිද්‍යා තෑගි අරමුදල සඳහා පනවනු ලබන රෙගුලාසි ඇතුළත් ගැසට් පත්‍රයක් නිකුත් කළහොත් නීති කෘත්‍යාන්හි නිරතවන වැටලීමේ නිලධාරීන්ට, පොලිස් නිලධාරීන් හෝ වෙනත් යම් රාජ්‍ය ආයතනයක හෝ පළාත් පාලන ආයතනයක යම් නිලධාරීන්ට ද කිසියම් තෑගි අරමුදල් ප්‍රතිශත මුදලක් පිරිනැමීම සිදු වන බැවින් කිසිඳු ගැටළු සහගත තත්ත්වයක් ඇති නොවේ.

**<u>යෝජනා</u>**

පුරාවස්තු ආඥා පනත 1940 දී පැනවීමෙන් පසු අවසන්වරට එකී පනත 1998 වර්ෂයේ දී සංශෝධනයට ලක් වී ඇත. මේ දක්වා පුරාවිද්‍යා තෑගි අරමුදලට අදාළ රෙගුලාසි සම්මත නොවීම හේතුවෙන් පාර්ශවයන් අතරේ තෑගි අරමුදල් ප්‍රතිශත බෙදා දීමට නොහැකි වී ඇත්තේ අදාළ රෙගුලාසිය සම්මත කර ගැනීමට නොහැකි වීම නිසාය. එකී රෙගුලාසි ඇතුලත් කෙටුම්පත සම්මතකර ගැසට් පත්‍රයේ පළ කිරීමෙන් පසු පුරාවස්තු ආරක්ෂා කර ගන්නන්ට සහ ඒ පිළිබඳ තොරතුරු සපයන්නන්ට සහ

අනෙකුත් නිලධාරීන්ට තෑගි අරමුදල් පිරිනැමීම තුළින් වඩා හොඳින් වැටලීම් සිදු කර පුරාවස්තු ආරක්ෂා කිරීමට හැකියාව පවතින බවට විශ්වාසය පළ කළ හැකිය.

***<u>කාරක සභාවේ නිරීක්ෂණ</u>***

කාරක සභාව විසින් පහත කරුණු පිළිබඳව නිරීක්ෂණය කළා ය.

- පුරාවස්තු ආඥාපනත (1998) යටතේ පිහිටුවන ලද ව්‍යවස්ථාපිත අරමුදල ක්‍රියාත්මක නොවීම හේතුවෙන්, ආඥාපනත යටතේ අය කරන දඩ මුදල් පාර්ලිමේන්තු පනතක් යටතේ නීත්‍යානුකූලව පිහිටුවා තිබියදීත්, පුරාවිද්‍යා දෙපාර්තමේන්තුවට ලබා දෙනු වෙනුවට සෘජුවම මහා භාණ්ඩාගාරයට බැර කර ඇත. 2012 වර්ෂයේදී ද ඇතුළුව මෙම අරමුදල ක්‍රියාත්මක කිරීමට මීට පෙර ගත් උත්සාහයන් සාර්ථක වී නොමැති බව කාරක සභාව වැඩිදුරටත් සඳහන් කළා ය.

- 2025 වර්ෂයේදී එකතු කරන ලද රුපියල් මිලියන 10 ක පමණ දඩ මුදල්, අරමුදල ක්‍රියාත්මක වූයේ නම් දෙපාර්තමේන්තුව සතුව රඳවා ගත යුතුව තිබූ ආදායමෙන් කොටසක් පමණක් නියෝජනය කරයි.

- අනුරාධපුර ඇතුළු නුවර පුරාවිද්‍යා භූමියෙන් අනවසර පදිංචිකරුවන් සාර්ථකව ඉවත් කර තිබුණද, ජනාකීර්ණ කෝට්ටේ පුරාවිද්‍යා උරුම කලාපය තුළ පදිංචිකරුවන් නැවත පදිංචි කිරීම ප්‍රායෝගික නොවන බව පෙනී යයි. ඒ අනුව, ගාලු කොටුවේ ආකෘතියට සමානව අවට ප්‍රජාවන් සමඟ සහජීවනයෙන් කටයුතු කිරීමට ඉඩ සලසන පුරාවිද්‍යා උරුම කළමනාකරණ ප්‍රවේශයක් වඩාත් සුදුසු බව කාරක සභාව නිරීක්ෂණය කළා ය.

- පිටකෝට්ටේ හන්දියේ පිහිටි ගල් අම්බලමට වාහන මගින් හානි වීමේ අවදානමක් පවතින අතර, එම අවදානම සැලකිය යුතු මට්ටමක පවතින්නේ නම් එය වෙනත් ස්ථානයක ස්ථාපිත කිරීම පිළිබඳව පුරාවිද්‍යා දෙපාර්තමේන්තුවට සලකා බැලිය හැකි බව නිරීක්ෂණය විය.

***<u>කාරක සභාවේ නිර්දේශ</u>***

කරුණු සලකා බැලීමෙන් පසුව කාරක සභාව විසින් පහත නිර්දේශය ඉදිරිපත් කළා ය.

- පාර්ලිමේන්තුව විසින් නියෝග අනුමත කළ වහාම ඒවාට අනුකූලව මූල්‍ය ත්‍යාග බෙදා හැරීමේ යාන්ත්‍රණය දෙපාර්තමේන්තුව විසින් ක්‍රියාත්මක කළ යුතු අතර එහි ප්‍රගතිය 2026 ජූලි 30 වන විට කාරක සභාවට වාර්තා කළ යුතුය.

- කෝට්ටේ ප්‍රදේශයේ උරුමයන්ගේ දෘශ්‍යතාව සහ මහජන දැනුවත්භාවය ඉහළ නැංවීම සඳහා කබොක් ගඩොල් ව්‍යුහයන් ප්‍රතිසංස්කරණය කිරීම තුළින් කෝට්ටේ බලකොටු බැමි ප්‍රතිසංස්කරණය කිරීම සහ අර්ධ වශයෙන් නිරාවරණය කිරීම ඇතුළුව සංරක්ෂණ සහ නාගරික සංවර්ධන කටයුතු සමගාමීව කළ යුතුය.

- **මුදල් විශුද්ධිකරණය වැළැක්වීමේ (සංශෝධන) පනත් කෙටුම්පත**

***<u>හැඳින්වීම</u>***

මුදල් විශුද්ධි කරණය වැළැක්වීමේ (සංශෝධන) පනත් කෙටුම්පත (පනත් කෙටුම්පත ) 2026.02.09 දින පැවති අමාත්‍ය මණ්ඩල රැස්වීම් වලදී අනුමත කරන ලද අතර 2026.03.13 දින රජයේ ගැසට් පත්‍රයේ ප්‍රකාශයට පත් කරන ලදී. මෙම පනත් කෙටුම්පත බලාත්මක වූ පසු, 2006 අංක 5 දරන මුදල් විශුද්ධි කරණය වැළැක්වීමේ පනතට සංශෝධන හඳුන්වා දෙන අතර ශ්‍රී ලංකාවේ මුදල් විශුද්ධිකරණය කිරීමේ වැරදි වැළැක්වීම, අනාවරණය කිරීම, විමර්ශනය කිරීම සහ නඩු පැවරීම සම්බන්ධ පවතින නීතිමය රාමුව ශක්තිමත් කරනු ඇත. මෙම පනත් කෙටුම්පතේ අනෙකුත් කරුණු අතර ප්‍රධාන ලක්ෂණ පහත පරිදි සාරාංශ කර
ඇත:

i. නීති විරෝධී ක්‍රියාකාරකම් වලින් උපයා ගන්නා ලද ඕනෑම දේපලක් පරිවර්තනය කිරීම සහ ඕනෑම නීති විරෝධී ක්‍රියාකාරකමකින් උපයා ගන්නා ලද ඕනෑම දේපළක අර්ථලාභී හිමිකාරිත්වය අත්පත් කර ගැනීම ආවරණය වන පරිදි මුදල් විශුද්ධිකරණ වරදේ විෂය පථය පුළුල් කිරීම;

ii. ක්‍රියා විරහිත කිරීමේ නියෝගයේ කාලය දින හත සිට වැඩ කරන දින දහහතර දක්වා දීර්ඝ කිරීම සහ මහාධිකරණය විසින් වරකට ලබා දිය හැකි උපරිම දීර්ඝ කිරීම මාස 4 ක් දක්වා වැඩි කිරීමෙන්, එවැනි දීර්ඝ කිරීම්වල උපරිම කාලය වසර තුනක් දක්වා වැඩි කිරීම;

iii. විශේෂ විමර්ශන ශිල්පීය ක්‍රමවේද සහ ඒකාබද්ධ විමර්ශන වලට අදාළ විධිවිධාන හඳුන්වා දීම;

iv. විමර්ශනය අතරතුර පොලිස් නිලධාරියෙකුට දිවුරුම් ප්‍රකාශයක් හෝ දිවුරා ලබා දුන් ප්‍රකාශයක් ලබා දීම සඳහා විධිවිධාන හඳුන්වා දීම සහ එවැනි දිවුරුම් ප්‍රකාශයක් සහ දිවුරා ලබා දුන් ප්‍රකාශයක ආවේශ්‍යතාවය පිළිබඳ විධි විධාන හඳුන්වා දීම.

v. 2025 අංක 5 දරන අපරාධයකින් උත්පාදිත දේ පිළිබඳ පනතට අනුකූලව, මුදල් විශුද්ධිකරණයට සම්බන්ධ දේපළ රාජසන්තක කිරීම, කළමනා කරණය කිරීම සහ බැහැර කිරීම සඳහා වන රාමුව වැඩිදියුණු කිරීම;

vi. පනතේ පැහැදිලි බව වැඩි දියුණු කිරීම සහ භාවිතය පුළුල් කිරීම සඳහා සාපරාධී දේපළ සහ සාපරාධී දේපළේ වටිනාකමට අනුරූප වටිනාකම ද ඇතුළුව පනතේ අර්ථ නිරූපණයන් විධිමත් කිරීම.

vii. මූල්‍ය කාර්ය සාධක බලකායේ නිර්දේශ මගින් දක්වා ඇති නීති විරෝධී ක්‍රියාකාරකම් ආවරණය වන පරිදි නීති විරෝධී ක්‍රියාකාරකම් ලැයිස්තුව පුළුල් කිරීම;

මෙම පනත් කෙටුම්පත ශ්‍රී ලංකාවේ මුදල් විශුද්ධි කරණයට වැළැක්වීමේ නීතිය ශක්තිමත් කරනු ඇත. සාමූහිකව, මෙම පනත් කෙටුම්පත ශ්‍රී ලංකාවේ මූල්‍ය පද්ධතියේ සුපිළිපන්න බව ආරක්ෂා කිරීම, ජාතික ආරක්ෂාව ශක්තිමත් කිරීම සහ මූල්‍ය කාර්ය සාධක බලකාය රාමුව යටතේ ජාත්‍යන්තර බැඳීම් සපුරාලීම සඳහා ඇති කැපවීම පෙන්නුම් කරයි.

***<u>කාරක සභාවේ නිරීක්ෂණ</u>***

කාරක සභාව විසින් පහත කරුණු පිළිබඳව නිරීක්ෂණය කළා ය.

- මෙම පනත් කෙටුම්පත මගින් නීතිවිරෝධී ක්‍රියාවන්ගෙන් උපයා ගත් දේපළ පරිවර්තනය කිරීම, භාවිත කිරීම, සන්තකයේ තබා ගැනීම සහ මිලදී ගැනීම ඇතුළත් වන පරිදි මුදල් විශුද්ධිකරණ වරද පුළුල් කිරීම මගින් ශ්‍රී ලංකාවේ මුදල් විශුද්ධිකරණයට එරෙහි රාමුව ශක්තිමත් කිරීමට අපේක්ෂා කර ඇත.

- මෙම සංශෝධන මගින් ප්‍රතිලාභී අයිතිය සහ අපරාධමය දේපළ සම්බන්ධයෙන් කටයුතු කිරීමේ අතිරේක ක්‍රමවේදයන් ඇතුළත් වන පරිදි මුදල් විශුද්ධිකරණය පිළිබඳ නිර්වචනය පුළුල් කර ඇති අතර, එමගින් විමර්ශන සහ අභියෝගයට ලක් කිරීමේ රාමුව ශක්තිමත් කර ඇත.

- විමර්ශකයින්ට පවතින සීමිත වැඩ කරන දින ගණන හේතුවෙන් ඇති වන ප්‍රායෝගික බලාත්මක කිරීමේ දුෂ්කරතා මඟහරවා ගැනීම සඳහා අත්හිටුවීමේ නියෝගවල (freezing orders) කාලසීමාව දින හතේ සිට වැඩ කරන දින දහහතර දක්වා වැඩි කිරීමට පනත් කෙටුම්පත යෝජනා කර ඇත.

- දේශීය ආදායම් පනත යටතේ හිතාමතා බදු පැහැර හැරීම මුදල් විශුද්ධිකරණය සඳහා පූර්වගාමී වරදක් බවට පත්වන අතර, එමගින් බරපතල බදු වැරදිවලින් ලැබෙන ආදායම මුදල් විශුද්ධිකරණ විමර්ශන විෂය පථයට ඇතුළත් කිරීමට හැකි වේ.

- මූල්‍ය කාර්ය සාධක බලකායේ (FATF) නිර්දේශවලට අනුකූල වීම සහතික කරමින්, ප්‍රධාන නීති සම්පාදනය කිරීමෙන් පසු විමර්ශන බලධාරීන් අත්විඳින ලද ප්‍රායෝගික අභියෝග ද සංශෝධන මගින් විසඳා ඇත.

- ආයතනික වගකීම් ද්විගුණනය වීම වැළැක්වීම සඳහා රාජසන්තක කරන ලද අපරාධ දේපළ කළමනාකරණය අපරාධ කළමනාකරණ අධිකාරියේ ආදායම් යටතේ ඒකාබද්ධ කෙරේ.

***<u>කාරක සභාවේ නිර්දේශ</u>***

කරුණු සලකා බැලීමෙන් පසුව කාරක සභාව විසින් පහත නිර්දේශය ඉදිරිපත් කළා ය.

- නියමිත මූල්‍ය ක්‍රියා පටිපාටි අනුගමනය කිරීමට අපොහොසත් වන ආයතන ප්‍රධානීන් සඳහා සුදුසු වගවීමේ පියවර සහ දඬුවම් හඳුන්වා දීම ඇතුළුව, මුදල් විශුද්ධිකරණය වැළැක්වීම (AML) සහ ත්‍රස්තවාදයට මුදල් සැපයීමට එරෙහි වීම (CFT) සම්බන්ධ මෑතකාලීන වර්ධනයන් ඇතුළත් වන පරිදි පරිපාලන රෙගුලාසි (AR) සහ මුදල් රෙගුලාසි (FR) සමාලෝචනය කර සංශෝධනය කළ යුතුය.

- ක්‍රිප්ටෝ මුදල් (cryptocurrencies) නියාමනය නොකළ හෝ නීතිමය වශයෙන් අවිනිශ්චිත පරිසරයක ක්‍රියාත්මක වීමට ඉඩ දෙනවා වෙනුවට, ඒවා සම්බන්ධයෙන් ඵලදායී නියාමනයක්, බදුකරණයක් සහ නීතිමය නිශ්චිතභාවයක් සහතික කිරීම සඳහා විස්තීර්ණ ව්‍යවස්ථාපිත රාමුවක් ස්ථාපිත කිරීමට අවශ්‍ය පියවර ගත යුතුය.

- **මුදල් ගනුදෙනු වාර්තා කිරීමේ (සංශෝධන) පනත් කෙටුම්පත**

***<u>හැඳින්වීම</u>***

මුදල් ගනුදෙනු වාර්තා කිරීම (සංශෝධන) පනත් කෙටුම්පත මගින් 2006 අංක 6 දරන මූල්‍ය ගනුදෙනු වාර්තා කිරීමේ පනත සංශෝධනය කිරීමට යෝජනා කරනු ලබන අතර, එහි ප්‍රධාන අරමුණ වන්නේ ශ්‍රී ලංකාවේ මුදල් විශුද්ධිකරණය වැළැක්වීම, ත්‍රස්තවාදයට මුදල් සැපයීම මර්දනය කිරීම සහ මහා විනාශකාරී අවි ව්‍යාප්තිය සඳහා මූල්‍ය සැපයීම වැළැක්වීම (AML/CFT/CPF) සම්බන්ධ නෛතික හා නියාමන රාමුව තවදුරටත් ශක්තිමත් කිරීමයි. යෝජිත සංශෝධන මගින් මූල්‍ය කාර්ය සාධක බලකායේ (Financial Action Task Force) නිර්දේශවලට අනුකූලව ශ්‍රී ලංකාවේ

තාක්ෂණික අනුකූලතාව ඉහළ නැංවීම, 2015 වර්ෂයේ අන්‍යෝන්‍ය ඇගයීම් වාර්තාව සහ ජාත්‍යන්තර මූල්‍ය අරමුදලේ තාක්ෂණික සහාය මෙහෙයුම මගින් ඉදිරිපත් කරන ලද නිර්දේශ ක්‍රියාත්මක කිරීම මෙන්ම, පවතින නීතිමය රාමුව තුළ හඳුනාගෙන ඇති ප්‍රතිපත්තිමය හා ක්‍රියාකාරී මට්ටමේ අඩුපාඩු නිරාකරණය කිරීම අපේක්ෂා කරයි.

ඒ අනුව, මෙම පනත් කෙටුම්පත මගින් මහා විනාශකාරී අවි ව්‍යාප්තිය සඳහා මූල්‍ය සැපයීම පනතේ විෂය පථයට ඇතුළත් කිරීම; අවදානම් මත පදනම් වූ ප්‍රවේශය (Risk-Based Approach) සහ ප්‍රතිලාභ අයිතිකරු (Beneficial Ownership) සම්බන්ධ විධිවිධාන ඇතුළුව ගනුදෙනුකරුවන් පිළිබඳ නිසි සැලකිල්ල (Customer Due Diligence) පිළිබඳ අවශ්‍යතා ශක්තිමත් කිරීම; ශ්‍රී ලංකා මහ බැංකුව තුළ මූල්‍ය බුද්ධි ඒකකය ස්ථාපිත කර එහි බලතල, කාර්යයන් සහ වගකීම් පැහැදිලි කිරීම; නියාමන අනුකූලතාව සහතික කිරීම සඳහා පරිපාලනමය දඬුවම් ක්‍රමවේදය ශක්තිමත් කිරීම; අථත්‍ය වත්කම් සේවා සපයන්නන්, කොළඹ වරාය නගරයේ බලයලත් පුද්ගලයන් සහ සූදු හා ඩිජිටල් සූදු කටයුතු සිදුකරන ආයතන ඇතුළු වාර්තාකරණ ආයතනවල විෂය පථය පුළුල් කිරීම; මුදල් විශුද්ධිකරණය වැළැක්වීම, ත්‍රස්තවාදයට මූල්‍ය සැපයීම මර්දනය කිරීම සහ මහා විනාශකාරී අවි ව්‍යාප්තිය සඳහා මූල්‍ය සැපයීම වැළැක්වීම පිළිබඳ ජාතික කමිටුව ස්ථාපිත කිරීම සඳහා විධිවිධාන හඳුන්වාදීම; සහ පනතේ සිංහල හා ඉංග්‍රීසි පාඨ අතර පවතින පාඨමය විෂමතා නිවැරදි කිරීම ඇතුළු ප්‍රධාන සංශෝධන කිහිපයක් යෝජනා කරනු ලැබේ.

***<u>කාරක සභාවේ නිරීක්ෂණ</u>***

කාරක සභාව විසින් පහත කරුණු පිළිබඳව නිරීක්ෂණය කළා ය.

- මූල්‍ය බුද්ධි ඒකකයට (FIU) විධිමත් ව්‍යවස්ථාපිත පිළිගැනීමක් ලබා දීම හරහා එය ශක්තිමත් වන අතර, ජාතික සම්බන්ධීකරණ කමිටුවට බැඳීම් සහගත උපදෙස් නිකුත් කිරීමට බලය පැවරෙන අතර, එමගින් මුදල් විශුද්ධිකරණය වැළැක්වීම/ත්‍රස්තවාදයට මුදල් සැපයීමට එරෙහි වීම/දේශසීමා මූල්‍ය අධීක්ෂණ ආයතන අතර සම්බන්ධීකරණය වැඩි දියුණු වේ.

- සුරැකුම්පත් හා විනිමය කොමිෂන් සභාව ඇතුළු නියාමන ආයතන වෙත මුදල් විශුද්ධිකරණය වැළැක්වීම/ත්‍රස්තවාදයට මුදල් සැපයීමට එරෙහි වීම් මාර්ගෝපදේශ දැනටමත් නිකුත් කර ඇති නමුත්, ආයතන තුළ පවතින ධාරිතා සීමාවන් හේතුවෙන් ක්‍රියාත්මක කිරීමේ පරතරයන් පවතින බව නිරීක්ෂණය විය.

- මූල්‍ය බුද්ධි ඒකකයේ (FIU) ක්‍රියාකාරී කණ්ඩායමක සහ කැපවූ කාර්ය සාධක බලකායක සහය ඇතිව, ඩිජිටල් ආර්ථික කටයුතු පිළිබඳ නියෝජ්‍ය අමාත්‍යවරයාගේ සභාපතිත්වයෙන් යුත් අනු කමිටුවක් විසින් අථත්‍ය වත්කම් (virtual assets) සඳහා වන පූර්ව නියාමන රාමුවක් සඳහා සංකල්ප පත්‍රිකාවක් සකස් කර ඇත.

- මූල්‍ය කාර්ය සාධක බලකායේ (FATF) ප්‍රමිතීන්ට ශ්‍රී ලංකාව අනුකූල වීම වැඩි දියුණු කිරීම සහ නැගී එන මූල්‍ය අපරාධ අවදානම් අවම කිරීම සඳහා වාර්තා කිරීමේ බැඳීම් සහ බලාත්මක කිරීමේ යාන්ත්‍රණයන් ශක්තිමත් කිරීම අත්‍යවශ්‍ය වේ.

- **ත්‍රස්තවාදීන්ට මුදල් සැපයීම මැඩපැවැත්වීමේ සම්මුති (සංශෝධන) පනත් කෙටුම්පත**

***<u>හැඳින්වීම</u>***

ත්‍රස්තවාදීන්ට මුදල් සැපයීම මැඩපැවත්වීමේ සම්මුති (සංශෝධන) පනත් කෙටුම්පත2026.01.12 දින පැවති අමාත්‍ය මණ්ඩල රැස්වීමේදී අනුමත කරන ලද අතර 2026.03.06 දින රජයේ ගැසට් පත්‍රයේ පළ කරන ලදී. මෙම පනත් කෙටුම්පත බලාත්මක වූ පසු 2005 අංක 25 දරන ත්‍රස්තවාදීන්ට මුදල් සැපයීම මැඩපැවත්වීමේ සම්මුති පනතට ( පනත) සංශෝධන හඳුන්වා දෙනු ඇති අතර, ශ්‍රී ලංකාවේ ත්‍රස්තවාදයට මුදල් සැපයීම මර්දනය කිරීම සඳහා දැනට පවතින නීතිමය රාමුව ශක්තිමත් කෙරෙනු ඇත. මෙම පනත් කෙටුම්පතේ අනෙකුත් කරුණු අතර, ප්‍රධාන ලක්ෂණ පහත පරිදි සාරාංශ කර ඇත:

i. විදේශීය ත්‍රස්තවාදී සටන්කරුවන්ට සහ සංවිධාන වලට මුදල් සැපයීම, ත්‍රස්තවාදීන්ට මුදල් සැපයීමේ වරදක් සිදු කිරීමට වෙනත් තැනැත්තන් සංවිධානය කිරීම, මෙහෙය වීම හෝ දායක වීම, සහකරුවෙකු ලෙස සහභාගී වීම ඇතුළත් වන පරිදි ත්‍රස්තවාදීන්ට මුදල් සැපයීමේ වරදේ විෂය පථය පුළුල් කිරීම;

ii. ශ්‍රී ලංකාවට බලපෑමක් ඇති කරන, සම්පූර්ණයෙන්ම හෝ කොටසක් ශ්‍රී ලංකාවේ පිටතදී කරන ලද ත්‍රස්තවාදීන්ට මුදල් සැපයීමේ වැරදි සඳහා පනතේ විෂය පථය පුළුල් කිරීම;

iii. ක්‍රියා විරහිත කිරීමේ නියෝගයෙහි කාලය දින හතක සිට වැඩ කරන දින දහහතර දක්වා දීර්ඝ කිරීම සහ ඕනෑම අවස්ථාවක දී මහාධිකරණය විසින් එක් වරකදී ලබා දිය හැකි උපරිම දීර්ඝ කිරීමේ කාලය, මාස තුනේ සිට මාස හයක් දක්වා වැඩි කිරීම;

iv. 2025 අංක 5 දරන අපරාධයකින් උත්පාදිත දේ පිළිබඳ පනතට අනුකූලව, ත්‍රස්තවාදීන්ට මුදල් සැපයීමට සම්බන්ධ වත්කම් කළමනා කරණය, රාජසන්තක කිරීම සහ බැහැර කිරීම සඳහා යාන්ත්‍රණ හඳුන්වා දීම;

v. පනත යටතේ විමර්ශනයක් සිදු කිරීමේදී භාවිතා කරනු ලැබිය යුතු විශේෂ විමර්ශන ක්‍රමවේද හඳුන්වා දීම.

vi. පනත යටතේ වරදක් සම්බන්ධයෙන් සපයනු ලැබිය හැකි හෝ එකතු කරනු ලැබිය හැකි '' අරමුදල් '' සහ '' දේපල '' වලට අමතරව ඊට අදාළ '' වෙනත් වත්කම් '' ආවරණය කිරීම සඳහා ප්‍රධාන ප්‍රඥප්තියේ විධිවිධාන අදාළ වීම දීර්ඝ කිරීම

vii. මහාධිකරණය විසින් අනුමත කරන ලද ගනුදෙනු, දේපළ සොයා යෑම් සහ 2002 අංක 25 දරන සාපරාධී කාරණා වලදී අන්‍යොන්‍ය සහයෝගීතාවය දැක්වීමේ පනත යෙදීම සම්බන්ධයෙන් පවතින විධිවිධාන පැහැදිලි කිරීම;

viii. ප්‍රධාන පනතේ පැහැදිලි බව වැඩි දියුණු කිරීම සඳහා නව අර්ථ කථන/නිර්වචන හඳුන්වා දීම.

මෙම පනත් කෙටුම්පත ත්‍රස්තවාදීන්ට මුදල් සැපයීමට එරෙහිව සටන් කිරීම පිළිබඳ ගෝලීය කැපවීම් සහ එක්සත් ජාතීන්ගේ සම්මුතීන්ට අනුකූල වීම සම්බන්ධයෙන් ශ්‍රී ලංකාවේ අනුකූලතාවය ශක්තිමත් කරන අතර, ඉදිරියේ පැවැත්වීමට නියමිත ශ්‍රී ලංකාවේ අන්‍යෝන්‍ය ඇගයීමට මුහුණ දීම සඳහා සූදානමද වැඩිදියුණු කරනු ඇත. මෙම පනත් කෙටුම්පත මගින් තම මූල්‍ය පද්ධතියේ සුපිළිපන්න බව ආරක්ෂා කිරීම, ජාතික ආරක්ෂාව ශක්තිමත් කිරීම සහ මූල්‍ය කාර්ය සාධක බලකා (FATF) රාමුව යටතේ ජාත්‍යන්තර බැඳීම් සපුරාලීම සඳහා ශ්‍රී ලංකාව දක්වන කැපවීම තවදුරටත් පෙන්නුම් කෙරේ.

***කාරක සභාවේ නිරීක්ෂණ***

කාරක සභාව විසින් පහත කරුණු පිළිබඳව නිරීක්ෂණය කළා ය.

- විදේශීය ත්‍රස්තවාදී සටන්කරුවන්ට මුදල් සැපයීම සම්බන්ධ වැරදි පරාසය පුළුල් කිරීම, විමර්ශන බලතල වැඩි දියුණු කිරීම සහ අරමුදල් සහ දේපළ පිළිබඳ නිර්වචනයට අතථ්‍ය වත්කම් ඇතුළත් කිරීම මගින් ත්‍රස්තවාදයට මුදල් සැපයීම සම්බන්ධ ශ්‍රී ලංකාවේ නීතිමය රාමුව ශක්තිමත් කිරීමට මෙම පනත් කෙටුම්පත අපේක්ෂා කරයි.

- මෙම සංශෝධනවල අරමුණ වන්නේ දේශීය නීති පද්ධතිය අදාළ එක්සත් ජාතීන්ගේ සම්මුතිය, එක්සත් ජාතීන්ගේ ආරක්ෂක මණ්ඩලයේ අංක 2178 දරන යෝජනාව සහ මූල්‍ය ක්‍රියාකාරී කාර්ය සාධක බලකායේ (FATF) නිර්දේශ සමඟ අනුගත කිරීමයි.

- ඇතැම් විධිවිධාන මගින් සිවිල් නිදහසට එල්ල විය හැකි බලපෑම පිළිබඳව මීට පෙර ගැටලු මතු වී තිබුණි; කෙසේ වෙතත්, ව්‍යවස්ථාදායක ක්‍රියාවලියේදී එම ගැටලු සලකා බලා ඇති බවත්, ශ්‍රේෂ්ඨාධිකරණ තීරණයට ප්‍රතිචාර වශයෙන් අවශ්‍ය අවස්ථාවලදී සුදුසු කාරක සභා අවස්ථා සංශෝධන සකස් කර ඇති බවත් සඳහන් විය.

- ඉදිරියේදී පැවැත්වීමට නියමිත FATF අන්‍යෝන්‍ය ඇගයීමේදී, නීතිමය විධිවිධාන පැවතීම පමණක් ඇගයීමට ලක් කරනවා වෙනුවට, විමර්ශන, නඩු පැවරීම්, වරදකරුවන් කිරීම් සහ වත්කම් අයකර ගැනීම ඇතුළුව ඒවා ක්‍රියාත්මක කිරීමේ ඵලදායීතාවය කෙරෙහි වැඩි අවධානයක් යොමු කරනු ඇත.

- FATF අළු ලැයිස්තුවට (Grey List) නැවත ඇතුළත් වීම මගින් ඇති වන අහිතකර ආර්ථික හා මූල්‍ය ප්‍රතිවිපාක හේතුවෙන් එය මගහරවා ගැනීම සැලකිය යුතු ජාතික වැදගත්කමකින් යුත් කරුණක් ලෙස පවතී.

***කාරක සභාවේ තීරණය***

කරුණු සලකා බැලීමෙන් පසුව,

- **2005 අංක 28 දරන ගෙවීමේ හා බේරුම් කිරීමේ පද්ධති පනතේ 11 වගන්තිය සමඟ කිය විය යුතු 17 වගන්තිය යටතේ නියෝග** (2025 දෙසැම්බර් 23 දිනැති අංක 2468/06 දරන අති විශේෂ ගැසට් පත්‍රයේ පළ කරන ලද)

- **(188 අධිකාරය වූ) පුරාවස්තු ආඥාපනතේ 46 වගන්තිය සමඟ කියවිය යුතු 47 වගන්තිය යටතේ නියෝග** (බුද්ධ ශාසන, ආගමික සහ සංස්කෘතික කටයුතු අමාත්‍යවරයා විසින් 2026 අප්‍රේල් 11 දින සාදන ලද)

- **මුදල් විශුද්ධිකරණය වැළැක්වීමේ (සංශෝධන) පනත් කෙටුම්පත**

- **මුදල් ගනුදෙනු වාර්තා කිරීමේ (සංශෝධන) පනත් කෙටුම්පත**

- **ත්‍රස්තවාදීන්ට මුදල් සැපයීම මැඩපැවැත්වීමේ සම්මුති (සංශෝධන) පනත් කෙටුම්පත**

සම්බන්ධයෙන් කාරක සභාව එකඟතාවය පළ කළ අතර, ඒ පිළිබඳ රජයේ මුදල් පිළිබඳ කාරක සභාවේ වාර්තාව, 2026 ජූලි මස 07 වැනි දින කාරක සභාවේ සභාපති ගරු (ආචාර්ය) හර්ෂ ද සිල්වා මහතා විසින් පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කළ යුතු බවට තීරණය කළා ය.

## குழுவின் அறிக்கை

அரசாங்க நிதி பற்றிய குழு 2026 ஜூன் மாதம் 30 ஆம் திகதி நடத்திய கூட்டத்தின் போது பின்வரும் ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டமூலங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

- **2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் 11 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 17 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்** (2025 திசெம்பர் 23 ஆம் திகதிய 2468/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது)
*(2026 ஜூன் மாதம் 23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது)*

- **(188 ஆம் அத்தியாயமான) தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்** (புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2026 ஏப்ரல் 11 ஆம் திகதி ஆக்கப்பட்டது)
*(2026 ஜூன் மாதம் 12 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது)*

- **பணம் தூய்தாக்கல் தடை (திருத்தச்) சட்டமூலம்**
- **நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம்**
- **பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டமூலம்**
*(2026 ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது)*

**குழுவினால் ஆராயப்பட்ட திகதி :** 2026 ஜூன் மாதம் 30 **நேரம்** : பி.ப. 02.00

<u>கலந்துகொண்ட அரசாங்க நிதி பற்றிய குழுவின் அங்கத்துவ உறுப்பினர்கள் (30.06.2026)</u>

1. கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா, பா.உ., (தவிசாளர்)
2. கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன, பா.உ.,
3. கௌரவ ரவி கருணாநாயக்க, பா.உ.,
4. கௌரவ ஹர்ஷன ராஜகருணா, பா.உ.,
5. கௌரவ நிமல் பலிஹேன, பா.உ.,
6. கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து, பா.உ.,
7. கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க, பா.உ.,

- **2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் 11 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 17 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள் (2025 திசெம்பர் 23 ஆம் திகதிய 2468/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது)**

<u>அறிமுகம்</u>

பணமோசடியைத் தடுத்தல் / பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதை எதிர்த்தல் (AML/CFT) ஆகியவற்றுக்கான உலகளாவிய கொள்கை வகுப்பாளரான நிதி நடவடிக்கை பணிக்குழு (FATF), உறுப்பு நாடுகள் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டிய 40 பரிந்துரைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த அமைப்பு, தனது உறுப்பு நாடுகள் இந்தப் பரிந்துரைகளை எந்த அளவிற்குப் பின்பற்றுகின்றன என்பதை மதிப்பிடுவதற்காக, அவ்வப்போது பரஸ்பர மதிப்பீடுகளை (Mutual Evaluation) நடத்துகிறது.

அதன்படி, நிதி நடவடிக்கை செயற்குழு இதற்கு முன்னர் 2006 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இலங்கை குறித்து இரண்டு பரஸ்பர மதிப்பீடுகளை நடத்தியுள்ளது. அந்த இரண்டாவது மதிப்பீட்டில், தனது 14 ஆவது பரிந்துரையில் குறிப்பிட்டுள்ளபடி, பணம் அல்லது மதிப்புப் பரிமாற்ற சேவை வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கோ அல்லது

உரிமம் வழங்குவதற்கோ ஒரு நாட்டில் முறையான அமைப்பு இருக்க வேண்டியதன் அவசியத்தை FATF அடையாளம் கண்டது. மேலும், இலங்கையில் அத்தகைய அமைப்பு இல்லாததை ஒரு கடுமையான பிரச்சனையாகக் கருதி சுட்டிக்காட்டி, தனது 14 ஆவது பரிந்துரைக்காக இலங்கையை அதிக இடர் உள்ள நாடாக மதிப்பிட்டது.

2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் பிரிவு 17 இனை, பிரிவு 11 உடன் சேர்த்து வாசிக்கும் போது, நிதி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு, அச்சட்டத்தின் கொள்கைகள் மற்றும் விதிகளைச் செயற்படுத்துவதற்கும், அந்த விதிகளைத் திறமையாக நடைமுறைப்படுத்துதல், நிர்வகித்தல் மற்றும் அமுல்படுத்துவதற்கும் உத்தரவுகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் உள்ளது.

அதன்படி, இலங்கையில் செயற்படும் பணம் அல்லது பெறுமதி மாற்றச் சேவை வழங்குநர்கள் பணச்சலவையைத் தடுத்தல் / பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதை எதிர்த்தல் ஆகியவற்றில் முறையான இணக்கமின்மை எனும் தற்போதைய சவால்களையும், நிதிப் பணிப்படையின் பரிந்துரைகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தையும் கருத்தில் கொண்டு, நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் அவர்கள், 2024 ஏப்ரல் 20 ஆந் திகதிய அதிவிசேஷட வர்த்தமானி இல. 2382/11 இல், 2024 இன் 1 ஆம் இலக்க பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள் ஒழுங்குவிதியினை வெளியிட்டார். இது 2024 ஜூன் 03 முதல் அமுலுக்கு வந்தது.

பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்களுக்கான மேற்கண்ட ஒழுங்குவிதிகளின் கீழ், இலங்கை மத்திய வங்கி அல்லது வேறு ஏதேனும் ஒழுங்குபடுத்துகை நிறுவனம் அல்லது அரசாங்க நிறுவனத்தால் வழங்கப்பட்ட வேறு எந்த உரிமம், அனுமதி அல்லது அங்கீகாரம் இல்லாமலேயே ஏற்கனவே பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவைகளை வழங்கி வந்த சேவை வழங்குநர்களுக்கு, மேற்கண்ட ஒழுங்குவிதிகள் அமுலுக்கு வந்த நாளிலிருந்து ஓராண்டு கால அவகாசத்தில் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பதிவுச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. இருப்பினும், இலங்கை மத்திய வங்கிக்கு இன்றுவரை ஒரே ஒரு விண்ணப்பம் மட்டுமே வந்துள்ளது. அந்த விண்ணப்பத்தில் கண்டறியப்பட்ட கடுமையான குறைபாடுகள் காரணமாக, அதனைத் திருத்தி மீண்டும் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்களுக்கான ஒழுங்குவிதிகளின்படி, இலங்கையின் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட நிறுவனம், கடல்கடந்த நிறுவனம் அல்லது ஒரு வெளிநாட்டு நிறுவனம் ஆகியவற்றைத் தவிர, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனியொன்று மட்டுமே பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்களுக்கான ஒழுங்குவிதிகளின் கீழ் பதிவுச் சான்றிதழைப் பெறத் தகுதியுடையதாகும்.

இருப்பினும், பல வெளிநாட்டுப் பண அல்லது மதிப்புப் பரிமாற்றச் சேவை வழங்குநர்கள் இலங்கையிலுள்ள தங்கள் முகவர்கள் மூலம் ஏற்கனவே பணம் அல்லது பெறுமதி மாற்றச் சேவை வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பதும், தற்போது அத்தகைய வெளிநாட்டுப் பண அல்லது பெறுமதி மாற்றச் சேவை வழங்குநர்கள், பண அல்லது மதிப்புப் பரிமாற்றச் சேவை வழங்குநர்களுக்கான விதிமுறைகளின்படி இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்வதற்குத் தகுதி பெறவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, வெளிநாட்டுப் பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்களின் பதிவை எளிதாக்குவதற்கும், அத்தகைய வெளிநாட்டுப் பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குவிதி வரையறையினை விரிவுபடுத்துவதற்கும், பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்களுக்கான தற்போதைய ஒழுங்குவிதிகளைத் திருத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது. இத்தீர்மானத்திற்கு மத்திய வங்கியின் ஆளுகைச் சபையும் அங்கீகாரம் அளித்துள்ளது.

1. இலங்கையில் செயற்படும் வெளிநாட்டு பணம் அல்லது மதிப்பு பரிமாற்ற சேவை வழங்குநர்களின் பதிவு தொடர்பில் ஏற்பாடுகளை வழங்கும் புதிய பிரிவொன்றைச் சேர்த்தல்.

2. உள்நாட்டு பணம் அல்லது மதிப்பு பரிமாற்ற சேவை வழங்குநர்களுக்கான குறைந்தபட்ச மூலதனத் தேவையை தற்போதுள்ள ரூபாய் 20 மில்லியனிலிருந்து ரூபாய் 15 மில்லியனாகக் குறைத்தல் மற்றும் வெளிநாட்டு பணம் அல்லது மதிப்பு பரிமாற்ற சேவை வழங்குநர்களுக்காக அமெரிக்க டொலர் 200,000 அல்லது வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகையை புதிய மூலதனத் தேவையாக அறிமுகப்படுத்துதல்.
3. வெளிநாட்டு விண்ணப்பதாரர்கள் உட்பட, ஏற்கனவே பணம் அல்லது மதிப்பு பரிமாற்ற சேவை வழங்குநர்களாகச் செயற்படுகின்றவர்களுக்கு இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்வதற்கான காலக்கெடுவை 2026 மார்ச் 31 ஆம் திகதி வரை நீடித்தல்.
4. மூன்று வருட இடைவெளியில் பதிவை காலமுறைப்படி புதுப்பிக்க வேண்டிய தேவையை நீக்குதல்

அதன்படி, 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பணம் அல்லது பெறுமதி பரிமாற்றச் சேவை வழங்குநர்கள் தொடர்பான 2025 ஆம் ஆண்டின் கட்டளை இல. 1 பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

***<u>குழுவின் அவதானிப்புக்கள்</u>***

கலந்துரையாடலின் பின்னர் குழு பின்வருவனவற்றினை அவதானித்தது;

- Money or Value Transfer Services (MVTS) தொடர்பான ஒழுங்குபடுத்தல் அமுலாக்கத்தில் காணப்பட்ட பலவீனங்கள் காரணமாக, ஹவாலா மற்றும் உண்டியல் போன்ற முறைசாரா நிதி பரிமாற்ற முறைகள் நீண்டகாலமாக ஒழுங்குபடுத்தல் தெளிவின்மை (Grey Area) நிலைமையில் இயங்கியிருந்தன. எனினும், அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட சட்ட ஏற்பாடுகள் மூலம், தமது நடவடிக்கைகளை சட்டபூர்வமாக ஒழுங்குபடுத்தத் தவறும் உரிமமற்ற சேவை வழங்குநர்களுக்கு எதிராக வழக்குத் தொடர சட்ட அடிப்படை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டது.

- MoneyGram மற்றும் Western Union உள்ளிட்ட முறைசார் MVTS சேவை வழங்குநர்கள், உரிமம் பெற்ற உள்நாட்டு முகவர்களின் ஊடாக இயங்குவதாகவும், முறைசாரா எல்லை தாண்டிய நிதி பரிமாற்றங்கள் 2020 ஆம் ஆண்டில் சுமார் ரூ. 7 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூ. 3.7 பில்லியனாகக் குறைந்துள்ளதாகவும், இது ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட்டதன் ஓரளவான செயல்திறனை வெளிப்படுத்துவதாகவும் குறிப்பிடப்பட்டது.

- அந்நியச் செலாவணி கட்டுப்பாடுகள், இறக்குமதி கொடுப்பனவு சரிபார்ப்பு மற்றும் சுங்க ஒப்பிணைப்பு (Reconciliation) முறைமைகளில், குறிப்பாக சில சந்தர்ப்பங்களில் பொருட்கள் இறக்குமதி செய்யப்படாமல் முன்கூட்டிய இறக்குமதி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகள் தொடர்பில், குறிப்பிடத்தக்க பாதிப்புநிலைகள் தொடர்ந்தும் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

- **(188 ஆம் அத்தியாயமான) தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்** (புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2026 ஏப்ரல் 11 ஆம் திகதி ஆக்கப்பட்டது)

**<u>அறிமுகம்</u>**

சட்டவிரோதமாக பயன்படுத்தப்பட்ட தொல்பொருட்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது தளங்கள் மற்றும் தொல்பொருட்களைப் பாதுகாப்பதற்கோ பங்களிக்கும் தகவல்களை வழங்குபவர்களுக்கு மற்றும் செயல்படுத்தும் உத்தியோகத்தர்களுக்கு வெகுமதி வழங்குவதற்காக இந்த நிதியம் நிறுவப்பட்டுள்ளது. தொல்பொருள் கட்டளைச் சட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நன்கொடை நிதியம் 1998 ஆம் ஆண்டு சட்டத்தினால் திருத்தப்படும் சந்தர்ப்பம் வரையும் அதன் பின்னரும் இந்த நன்கொடைகளை வழங்குவதற்கான ஒரு முறையை அறிமுகப்படுத்தப்படவில்லை. 46(1) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதாவது அப்பிரிவின் (அ) இன் கீழ், தொல்பொருள் கட்டளைச் சட்டத்தை மீறல்களின் போது நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்ட பிறகு உரிய அபராதத் தொகையின் பாதி தொல்பொருளியல்

நன்கொடை நிதியத்திற்கு வரவு வைக்கப்படுவதுடன், உரிய நிதி யாருக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக விதிமுறைகள் விதிக்கப்படவில்லை.

இது தொடர்பாக விதிமுறைகள் உள்ளடங்கிய சுருக்க வரைவு ஒன்றை தயாரித்து சட்ட சுருக்க வரைவாளருக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின்னர் விடயத்திற்கு பொறுப்புடைய அமைச்சரின் கையொப்பத்தை இட்டு அமைச்சரவைக்கு சமர்பித்து அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின் தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் 47(3) உட் பிரிவின்படி பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்பித்த பின் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக அனுப்பட வேண்டும். அதற்காக மும் மொழியிலும் ஒழுங்கமைக்கப்பட்ட பிரதிகளை புத்த சாசனம், சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் தொடர்பான அமைச்சு அதனை பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படவுள்ள ஒழுங்குமுறைகள் மூலம் பெயர் குறிப்பிடப்படுகின்ற தரப்பினருக்கு நன்கொட நிதியத்தினால் குறிப்பிட்ட சதவீதத்தை செலுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, பின்வரும் தரப்பினருக்கு நன்கொடை நிதியை செலுத்துவது பொருத்தமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

01. தகவல் வழங்குனர்கள் நன்கொடை நிதியில் இருந்து செலுத்தப்படுகின்ற சதவீதம் 10%

02. சட்டப்பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு, காவல்துறை உத்தியோகத்தர்களுக்கு அல்லது பிற எந்த ஒரு அரச உள்ளூராட்சி சபையின் எந்த ஒரு உத்தியோகத்தர்களுக்காக இருந்து செலுத்தப்படுகின்ற சதவீதம் 30% நிறுவனத்தின் அல்லது நன்கொடை நிதியில்

03. கள திணைக்களத்தின் ஆய்வுகளை மேற்கொள்ளும் தொல்பொருளியல் உத்தியோகத்தர்களுக்கு, சட்டப்பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் உதவி சட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் அத் திணைக்களத்தில் ஏனைய சேவையாளர்களுக்கு நன்கொடை நிதியில் இருந்து செலுத்தப்படுகின்ற சதவீதம் 40%

மேலே குறிப்பிடப்பட்ட தரப்பினர்களுக்கு செலுத்தப்படுகின்ற நன்கொடை நிதிய சதவீதங்களின் கூட்டுத்தொகை 80% ஆவதுடன் மீதி நூற்றிற்கு இருபது (20%) சதவீதம் தொல்பொருள் நன்கொடை நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

**நன்கொடை நிதி வழங்குவதற்கான காரணங்கள்.**

தொல்பொருள் கட்டளைச் சட்டத்தை மீறுகின்றவர்கள் தொடர்பான தகவல்களை வழங்கும் உத்தியோகத்தர்களை ஊக்குவிக்கவும், அவர்களின் பணியை மேலும் மேம்படுத்துவதற்காக அவர்களுக்கு வெகுமதி அளிக்கவும் இந்த நன்கொடை நிதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தொல்பொருள் கட்டளைச் சட்டத்தை மீறுபவர்களைக் கைது செய்வதற்கான ஒரு அதிரடிப் படையை இச்சட்டம் அடையாளம் காணாததால், சட்டத்தை மீறுபவர்களைக் கைதுசெய்து சட்டத்தை அமுல்படுத்தும் பணியை இலங்கை காவல்துறை மேற்கொள்கிறது.

தொல்பொருள் கட்டளைச் சட்டத்தை மீறுதல் தொடர்பாக காவல்துறையால் விதிக்கப்படுகின்ற வழங்குகளின் போது நீதிமன்றத்தினால் பிரதிவாதிகளுக்கு அபராதம் விதித்த பிறகு, அந்த அபராதத் தொகையில் பாதியினை தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் 46(I) பிரிவின் கீழ் தொல்பொருள் நன்கொடை நிதிக்கு வரவு வைக்கப்பட வேண்டும். இந்த வழக்குகள் பெரும்பாலும் காவல்துறையினால் தாக்கல் செய்யப்படுவதால், பிரதிவாதிகளுக்கு அபராதம் விதிக்கும்போது, அபராதத் தொகையில் பாதியை காவல்துறை நன்கொடை நிதிக்கு வரவு வைக்குமாறு நீதிமன்றம் உத்தவிடுவதாக எங்களுக்கு சில சமயங்களில் அறிக்கைகள் வந்துள்ளன. இருப்பினும், தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 46(1) ஆம் பிரிவின் படி, அபராதத் தொகைகள் தொல்பொருள் நன்கொடை நிதிக்கு வரவு வைக்கப்பட வேண்டும். காவல்துறை நன்கொடை நிதியத்திற்கு வரவு வைக்குமாறு இத்தகைய கோரிக்கைகள் விடுக்கப்படுவதற்கான காரணம், தொல்பொருள் நன்கொடை நிதியம் இன்னும் செயல்பாட்டுக்கு வராததேயாக இருக்கலாம். காவல்துறை நன்கொடை நிதியில் இவ்வாறு வரவு வைக்கப்பட்டால் தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு இந்த நன்கொடை நிதியத்திலிருந்து எந்தப் பங்கையும் பெற முடியாது. இந்த தொல்பொருள் நன்கொடை நிதியத்திற்காக விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளைக் கொண்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டால், நன்கொடை நிதியின் ஒரு குறிப்பிட்ட சதவீதம் சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்கள், காவல்துறை உத்தியோகத்தர்கள் அல்லது சட்டப்பூர்வ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வேறு ஏதேனும் அரச நிறுவனம் அல்லது உள்ளூராட்சி சபை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் என்பதால், எந்தப் பிரச்சினையும் ஏற்படாது.

**முன்மொழிவு**

தொல்பொருள் கட்டளைச் சட்டம் 1940 ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட பின்பு இறுதியாக உரியச் சட்டம் 1998 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதுகால வரை தொல்பொருள் நன்கொடை நிதியத்திற்கு உரித்தான விதிமுறைகளை ஒழுங்கமைக்கத் தவறியதன் காரணமாக, நன்கொடை நிதியின் சதவீதங்களை

சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே பகிர்ந்தளிக்க முடியவில்லை. உரிய விதிமுறைகள் உள்ளடங்கிய சுருக்க வரைவினை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின் தொல்பொருட்களை பாதுகாக்கின்றவர்களுக்கும் இது தொடர்பான தகவல்களை வழங்குபவர்களுக்கும் பிற உத்தியோகத்தர்களுக்கும் நன்கொடை நிதி வழங்குவதன் மூலம் மிகவும் சிறந்த சுற்றிவலைப்பை மேற்கொண்டு தொல்பொருட்களை பாதுகாப்பதற்கு இயலுமை காணப்படுவதாக நம்பிக்கைக் கொள்ளலாம்.

***<u>குழுவின் அவதானிப்புக்கள்</u>***

கலந்துரையாடலின் பின்னர் குழு பின்வருவனவற்றினை அவதானித்தது;

- புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் (1998) கீழ் நிறுவப்பட்ட சட்டபூர்வ நிதியம் (Statutory Fund) இதுவரை செயற்படுத்தப்படாமல் இருந்து வருவதால், அச்சட்டத்தின் கீழ் அறவிடப்படும் அபராதத் தொகைகள், அந்நிதியத்திற்கு ஒதுக்கப்படாமல் நேரடியாக திறைசேரிக்கு மாற்றப்படுவதாகக் குறிப்பிடப்பட்டது. பாராளுமன்றச் சட்டம் ஒன்றின் மூலம் குறித்த நிதியம் சட்டபூர்வமாக நிறுவப்பட்டிருந்தபோதிலும், 2012 ஆம் ஆண்டு உட்பட அதனை செயற்படுத்த மேற்கொள்ளப்பட்ட முந்தைய முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை எனக் குழு அவதானித்தது.

- 2025 ஆம் ஆண்டில் குறித்த கட்டளைச் சட்டத்தின் (Ordinance) கீழ் சுமார் ரூபா 10 மில்லியன் அபராதத் தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், நிதியம் செயற்பாட்டிலிருந்திருந்தால், திணைக்களம் தக்கவைத்திருக்க வேண்டிய வருவாயின் ஒரு பகுதியை மட்டுமே அது பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

- அநுராதபுரம் உள்நகர் தொல்பொருள் தளத்திலிருந்து சட்டவிரோத குடியேறிகள் வெற்றிகரமாக அகற்றப்பட்டிருந்தபோதிலும், அடர்த்தியான குடியிருப்புகள் காணப்படும் கோட்டை (Kotte) பாரம்பரிய பிரதேசத்தில் மீள்குடியமர்த்தல் நடைமுறையில் சாத்தியமற்றதாகக் குறிப்பிடப்பட்டது. அதன்படி, காலி கோட்டை (Galle Fort) முன்மாதிரியை போன்ற வகையில், சுற்றியுள்ள சமூகங்களுடன் இணைந்து வாழ்வதற்கு இடமளிக்கும் பாரம்பரிய முகாமைத்துவ அணுகுமுறை மிகவும் பொருத்தமானதாகக் குழு அவதானித்தது.

- புறக்கோட்டை (Pita Kotte) சந்தியில் அமைந்துள்ள கல் அம்பலம் (Gal Ambalama) வாகனங்களினால் சேதமடையும் அபாயம் காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டதுடன், அவ்வபாயம் குறிப்பிடத்தக்கது (Significant) என மதிப்பிடப்பட்டால், அதனை வேறிடத்துக்கு இடமாற்றம் செய்வதைப் புராதனவியல் திணைக்களம் பரிசீலிக்கலாம் எனக் குழு அவதானித்தது.

***<u>குழுவின் விதப்புரைகள்</u>***

பரிசீலனையின் பின்னர் குழு பின்வருவனவற்றினை விதந்துரைத்தது;

- பாராளுமன்றத்தால் ஒழுங்குமுறைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன், பண வெகுமதிகளை வழங்கும் பொறிமுறையை திணைக்களம் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதன் முன்னேற்றம் (Progress) தொடர்பான அறிக்கை 2026 ஜூலை 30 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு (Committee) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

- கோட்டை (Kotte) பிரதேசத்தில் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். இதன் ஒரு பகுதியாக, கபொக் செங்கல் கட்டமைப்புகளை (kabok brick structures) புனரமைத்து, கோட்டை மதில்களின் சில பகுதிகளை வெளிப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் மூலம் பாரம்பரிய மரபுரிமையின் காட்சித்தன்மை மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு மேம்படுத்தப்பட வேண்டும்.

- **பணம் தூய்தாக்கல் தடை (திருத்தச்) சட்டமூலம்**

**அறிமுகம்**

பணம் தூய்தாக்குதலைத் தடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் (சட்டமூலம்) 2026.02.09 அன்று இடம்பெற்ற அதன் கூட்டத்தில் அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டு, 2026.03.13 அன்று அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இச்சட்டமூலம் சட்டமாக்கப்பட்டவுடன் 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூய்தாக்குதலைத் தடுத்தல் சட்டத்திற்கு திருத்தங்களை அறிமுகப்படுத்தி இலங்கையில் பணம் தூய்தாக்குதல் தவறுகளைத் தடுத்தல், கண்டுபிடித்தல், விசாரணை மற்றும் வழக்குத்தொடுத்தல் தொடர்பில் சட்டக்கட்டமைப்பினை வலுப்படுத்தும். ஏனையவற்றுக்கு மத்தியில் சட்டமூலத்தின் முக்கிய அம்சங்கள் கீழே தொகுக்கப்பட்டுள்ளன-:

i. சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட ஆதனத்தின் ஏதனும் மாற்றுதலை அத்துடன் ஏதேனும் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளிலிருந்து பெறுவிக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தின் பயன்பெறு சொத்தாண்மையை கையகப்படுத்தலை உள்ளடக்குவதற்கு பணம் தூய்தாக்குதல் தவறுகளின் நோக்கெல்லையினை விரிவுபடுத்துதல்;

